

# நரசிங்க வயிரவர் அகவல், காவியம், கும்மிப்பாடல்

ஆக்கமும் தொகுப்பும்


புலவர் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# நரசிங்க வயிரவர் காவியப் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்



ஓம் லம்போதராய நமக

துதி

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பு மிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா

# நரசிங்க வயிரவர் அகவல்
# காவியம்
# கும்மிப்பாடல்கள்

ஆக்கம் தொகுப்பு:
கலாபூஷணம் நாகமணி விநாயக மூர்த்தி

சேனைக்குடியிருப்பு
10-05-2016

விலை: *180/-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

பெரியோர்களே!

எமது கிழக்கிலங்கையில் குல தெய்வ வழிபாட்டு முறைகள் ஒவ்வொரு கிராமத்திலும் முன்னிலை கொண்டிருப்பதும் வயிரவக் கடவுளை குல தெய்வமாகப் போற்றும் மாபினரும் உண்டு. இந்த வயிரவரோடு நூற்றிஎட்டு வயிரவர்கள் அட்டமா சித்திகளை கொடுப்பவர்களாக கற்றறிந்த பெரியோர்கள் கூறுகின்றனர். அந்தவகையில் நரசிங்க வயிரவரும் அதில் ஒருவரே தர்மத்தை காத்து அதர்மத்தை அழிக்கும் வல்லோனாகிய சிறிமன் நாராய மூர்த்தி அவர்களின் நரசிங்க அவதாரம் மிக மகிமை பொருந்தியதாகும். தான் பெற்ற அழிவில்லா வரத்தால் இரணியன் மமதைக் கொண்டான். தன் மகனான பிரகலாததேவன் அறத்தின் பெருமையும் தர்மத்தில் புகழையும் என்றும் அழிவில்லா பரம்பொருள் உண்டெனக் கூறியும் இரணியன் ஆணவச் செருக்கோடு நானே இறைவன் என் பெயர் தேவலோக முதல் மண்ணுலகு வரை ஒலித்துக் கொண்டிருக்க வேணும். தேவர்களெல்லாம் என் ஆணையின் கீழ் நடப்பதே சிறந்தது திருமாலென்ன படைத்தல் காத்தல் அழித்தல் எல்லாம் என் சொற்படி கேட்டே நடைபெற வேண்டுமெனவும் ஆட்சி அதிகாரம் அடக்கு முறை நானே இந்த நாட்டுக்கு அதிபதி என்ற கொடுங்கோல் ஆட்சி செய்த இரணியனைப் போன்றோர்களை மாய்த்து நாட்டின் தர்மநெறி தளைத்திட வேண்டுமெனக் சிறிமன் நாராயண மூர்த்தியை வணங்கிபணிவோமாக.

அன்பர்களே!

எமது தேடலில் பல பேர் உதவுவதாகவும் சில பேர் மனதிருந்தும் கரத்தால் தர மறுப்பதைக் கண்டேன். அந்த வகையில் எனது மதிப்பிற்குரிய திரு.கண்மணிதாசன் ஓர் சிறிய நரசிங்க துதி அடங்கிய பத்துப்பாடல் நூலை தந்துதவினார்.மற்றும் மா கேதாரபிள்ளை வெளியிட்ட நரசிங்க வயிரவர் காவியப் பாடலை திரு.ரவிக்குருக்கள் ஆலையடி வேம்பு அவர்களும் மிதமுள்ள அகவல் கும்மிப்பாடல்கள் அடியேனால் ஆக்கம் பெற்று இன்நூலை நிறைவு செய்கிறேன். அன்பு உள்ளங்களே குறைபோக்கி நிறைமனதோடு இப்பாடல்களை பராயணம் செய்து நரசிங்க வயிரவர் அருள் பெற்று வாழ்வோமாக .

- வணக்கம் -

அன்புடன்
இறை தொண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரசிங்க சுவாமி அகவல்

ஓம் வஜ்ரநகாய வித்மஹே
தீக்ஷ்ண தம்ஷ்ட்ராய தீமஹி
தந்நோ நரஸிம்ஹ ப்ரசோதயாத்

ஓம் நமோ நாரணா நம்பினேன் உன்னை
வராக அவதாரணா வணங்கிப் பணிந்தேன்.
உகார மகார ஓம் நமோ வாரணா
சிகார சிம்மய சிறி நமோ தேவனே
எல்லாம் வல்ல எம் பெருமானே
வல்லார் தங்களை வதைத்து மண் காத்தோய்
இரணியன் மகனாய் இலங்கச் செய்து
பிரக லாதனுக்கு பேற்றிவூட்டி
குருவினிடத்தில் கொண்டு படித்திட
ஆன குருவும் அறிநமோ வெறுத்து
இரணியன் நாமத்தை இனிதாய்ச் சொல்ல
மறுத்துக்குருவை வழங்கு சொல் எதிர்த்து
தந்தையிடத்தில் தனையைக் கூட்டி
அரசே மகனும் அரிநமோ என்கிறான்.
கூறக்கேட்ட கொற்ற வேந்தனும்
இரணியன் நமோ வென என்னும் நாமம்
படியடா என்னப் பாலனப் போது
நமோ நாராயணா என நான் உரைப்பேனென்று
கூறப் புதல்வன் கெடும் சினமுற்று
இங்கே அவனும் இறப்பானோ வென
தூணிலும் இருப்பார் துரும்பிலு மிருப்பார்
என்று புதல்வன் இனிதாய் உரைக்க
இம் மணித் துணில் இருப்பானோ வென
வெந்து சினந்து மிகுமணித் தூணை
தெண்டாயுதத்தால் சிதறி அடிக்க
வண்டார் குழவார் மறை நாயகனும்
சிங்க முகமாய் சினத்துப்பிடித்து
மடியில் இருத்தி மார்பைக் கிழித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிரம் குடித்த உத்தம நாசிங்க வயிரவா
மாபலியிடத்தில் மண்ணில் மூன்றடி
கேட்டுப் பெற்று கிரகித்தவனே
வானும் மண்ணும் மற்றும் அவன் சிரசில்
ஊன்றிப் பதித்த உத்தம நேசா
பாற்கடல் துயிலும் பச்சை வண்ணனே
கம்சனைக் கொன்ற கார்முகில் வண்ணா
ஆலிலை மீது அமர்ந்த நாராயணா
காலிகள் மேய்த்த கண்ணனே வண்ணா
நெஞ்சில் இருத்தி நேர்ந்து பணிந்தேன்
அஞ்சலென்றென்னை அணைத்தருள் புரிவாய்
வஞ்சனை பில்லி மாற்றான் செய்வினை
உன்பெயர் உரைக்க ஓடி மறைந்திட
நன்னருள் புரிவாய் நமோ நாராயணனே
மறித்து இருக்கிறான் மயங்கி நிற்கிறேன்
தெறித்து அவன் விள சினத்தெளு துரையே
உரத்துக் குதித்து ஓடிவா அப்பா
சினத்து எழுந்து சீக்கரம் வாவா
வாவா ஐயா வால நரசிங்க வயிரவா
எதிரியிடத்தில் இணாங்கி நில்லாதே
பிடிபிடி அடிஅடி பின்னிரக்கம் பாராதே
கடி கடி கடி கால நரசிங்கா
உன் தாய் ஆணை ஓடிவா துரையே
எந்தன் மனையில் இருக்கும் ஏவலும்
வைப்பு பில்லி மாறான் செய்வினை
மறைந்து இருக்கும் மாடன் காடன்
இருட்டில் மறையும் ஏவல் பேய்கள்
வெருண்டு ஓட வீரா அருள்வாய்
அருள்வாய ஐயனே ஆதி நரசிங்கா வயிரவா
வைக்கும் பூசை மடைதனை ஏற்று
சித்தி தருவாய் சிறி நமோ நரசிங்கா
எல்லாம் வல்ல இறைவன் நீயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லல் போக்கும் ஆண்டவன் நீயே
தொல்லை அகற்றும் சுந்தரன் நீயே
நீரும் நீயே நிலமும் நீயே
வானும் நீயே மண்ணும் நீயே
கண்ணில் காணும் காட்சியும் நீயே
வண்ண மலரின் மணமும் நீயே
செங்கண் வண்ணா சிறி நமோ தரனே
சிங்கமுகமும் சிரித்த பல்லும்
துங்கச்சடையும் துலங்கு நெற்றியும்
நாமம் படைத்த நரசிங்க வயிரவா
தாமதியாது சடுதியில் வருவாய்
வருவாய் வருவாய் வாசுதேவனே
வெங்கடேசனே வீரா போற்றி
சிறினிவாசனே திருப்பாக் கடலில்
சயனித்தருளும் சங்குசக்கார போற்றி
எம்மைக்காக்கும் இராகவா போற்றி
வைகுந்த மோட்ட வாழ்வை அளிக்கும்
மாதவயாதவ குலத்தாய் போற்றி
பத்மநாதனே பரந்தாமா போற்றி
உத்தமர் நெஞ்சி உறைவோய் போற்றி
லெட்சுமி நாராயணா நின் தாழ் சணம்
நரசிங்கையனே நம்பினோம் உனையே
குற்றம் போக்கி குறைகள் அகற்றி
நித்தம் காக்கும் நீல வண்ணனே சரணம்
உந்தனை நம்பினோம் ஓடி வந்தருளே
எங்கள் பகைமை இடர்கள் அகற்றி
லெட்சுமி கடாட்சம் நீயே அருள்வாய்
உத்தம நரசிங்க மூர்த்தியே சரணம்
சரணம் சரணம் சங்குசக்கரா
சரணம் சரணம் சுவாமியே சரணம்
நரசிங்க வயிரவா நமஸ்தே நமஸ்த்து

*நரசிங்க சுவாமி அகவல் முற்றிற்று.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரசிங்க வயிரவர் காவியம்

01. திருதங்கும் உலகெங்கும் அருள்பொங்க வருமெங்கள்
நரசிங்கவயிரவர் காவியமியற்ற
மருகொன்றை மலர்தன்னை முடியிலணியரனும்
வாலைசரசோதியும் ஆதிலெட்சுமியும்
அருள் தந்து அடியாரை ஈடேற்றி ஆளும்
அறுமுகனோடுறை வள்ளி தெய்வானைத் தாயும்
ஒருகொம்பொடித்து மகாமேருவிற்பாரதம்
வரைந்திட்ட தும்பிமுகன் மலர்பாதம் துணையே

02. அரியாகி ஓர் எழுத்தான நெடுமாலும்
அழகுதிரு விளையாடலதுபுரியவே எண்ணி
பிரியாதபற்றுடைய இரணியன்தேவிக்கு
கொருமதலையாய் வளரவேணுமென வேதான்
கரியோனுமிதுநினைவு நிறைவேற எண்ணி
கயிலையிலே நேமிதனை ஐயமுறநோக்கி
ஒருநாளும் திருநாமம் அளியாத பிரகலாத
தேவனுருவாகுமென ஏவிவிட்டனரே.

03. ஆதிநெடுமால்தானும் ஓதிவிடவே தான்
அப்போது சக்கரம் தப்பாமல் சென்று
மாதுதிருகெற்பமதில் மதலையாய் வளர
மங்கையர் தனக்கதிக திங்கள்பத்தாகி
வாதைகள் பட்டவெகு வேதனையுமாகி
மங்கையரும் அங்கதனை இங்கிதர்மாக
ஓதிடுவீர் இம்மொழியை மன்னனுக்கெனவே
உற்றதொரு தாதியரும் மெற்றவுரை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. இரணியனுக்கிந்தமொழி ஏந்திளைமாரோத
ஈடில்லை என்றவனும் எண்ணிமனமுன்னி
தரணிதனை அரசாளும் எனகருமை மனைவி
தன்துயரம் தீரவொரு சுந்தரமாதினையே
வருகவென அழையெனவே வனிதையர்களோடி
வரிசைபெறு மருத்துவத்தாய்தனை அழைத்து
கருமமது செய்திட ஓர்மதலை தன்னை
காரிகையும் ஈன்றுதன் கவலையற்றனளே.

05. ஈன்றதொரு மதலையை இரணினும் கண்டு
ஈசனுமிவனுக்கு ஈடில்லையென்று
நீண்டதொரு புவியாழ்வோன் மைந்தனை நினைத்து
நித்தியமும் கல்விபயில்விக்குமொரு குருவை
சென்றவனழைத்திடென சேவர்களோடி
செப்பரிய சுக்கிரகுலதிலகனாரை
கண்டவனுரைசெய்ய விற்பரரும் வந்து
காவலனார்தன்னிடம் ஏவல்கேட்டனரே.

06. உம்பர்தொழு தெய்வமும் நானென்று ஓது
ஓம் நமசிவாயமும் நானென்று ஓது
என்தம்பிதனைக்கொன்ற மாயனென்றோது
தரணிதனில் வேறு தெய்வம் இல்லையென்றோது
அம்புவியிலதை மறுத்தோதுவர் தன்னை
அடியோடு வேரறுத்திடுவேனென்றோது
நம்பியே இரணிய நமாவென்று சொன்னால்
நமனும்மணுகாதென ஓதிடுவீரே.

07. ஊனாகி உயிரான உன்தந்தை தம்பி
உலகெங்கும் உறைதெய்வம் உன்தந்தை தம்பி
நானாகி நீயானஉன் தந்தை தம்பி
நல்லதொரு பாடமிதை சொல்லும் நீ தம்பி
கோனாரும் உன் தந்தை இரணிய நமாவென்றால்
குற்றமது வராமல் சற்றுலகை ஆழ்வாய்
ஆனாலுமிது பாடம் அறிவாய் நீ தம்பி
அல்லவென்றாலுந்தன் அப்பர்முன் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. என்னென்று உன்முன்னே சொல்வேன் நான் குருவே
ஈரேழுலோகமும் நிறைந்த ருளுமீசன்
தன்னையே துதியாமல் எமன்கொண்டு செல்லும்
தந்தையை துதித்திட மந்தையோ நீதான்
உன்னிலும் மென்னிலும் உலகெங்கு முறையும்
ஓம் நமசிவாயமென்றோதும் நீ குருவே
உன்நாணை என்நாணை உம்பர்தொழு மூர்த்தியை
ஓதுவீரென்றப்பர்க்குரை செய்வீர் குருவே.

09. ஏதடா என்முன்னே இந்த மொழியதனை
இயம்பியதால் உன்உயிர் இனிதப்பிவிடுமோ
வாதாடசெய்கிறாய் உன்தந்தை முன்னே
வரவேணும் இம்மொழியை உரைசெய்யாவிட்டால்
பாதகா உன்குடியும் என்குடியும் கெடமுன்
பருத்தமுடி மன்னரிடம் கொடுத்திடுவேனுன்னை
ஆதலால் உந்தனிட அப்பர்பெயரோது
அல்லாது அவர்முன்னே நில்லாது செல்வோம்.

10. ஐயையோ ஓர் புதுமை தன்னை நீ கேளும்
அறியாத பாலகன் அவனையும் கேளும்
தெய்வமது உண்டென்று சொல்கிறான் அப்பா
சிறியேன் நான் சொல்வது ஒதுபோதும் தப்பா
பையனுரைதானென்று பணிந்தவருரைக்க
பார்த்திபனும் உற்றவன்போலே நகைத்து
கைதனில் பற்றியே ஏதுமொழி கூறென்று
பகரலுற்றான் பெரிய பிரகலாதேவன்.

11. ஒளியாமல் நீசொன்ன சொல்தனை ஓது
ஒருநாளும் அழியாத சடலம்நானென்றுறோது
விளியாதே எதுஎன்று விபரமாய் ஓது
விண்ணெங்கு முறையீசன் நானென்று ஓது
துளியாக உன்உதிரம் சிந்திட வதைப்பேன்
துணிவான உன்தெய்வம் எதுவென்று காட்டு
அளியாத என்தம்பி உயிரதைவதைத்த
அரியெங்கே என்றெனக்கறிய நீ சொல்லே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஓங்காரத்துட் பொருளாய் உலகெங்கும் உறைவோன்
உன்னிலுமென்னிலும் உயிராயிருப்போன்
தூங்காத தூணிலும் துரும்பிலுமிருப்போன்
சொல்லொண்ணாச் செல்வமொடு வல்லமையளிப்போன்
பாங்காக அவர் தன்பாதமலர் தூவிநிற்கும்
பக்தற்கு முத்தியை நித்தமுமளிப்போன்
ஆங்காரமுள்ளோரை அடியோடறுப்பாரெம்
ஆதிபரா நாரணன் ஆடலிதுவாமே.

13. ஔவென்றும் கிலியென்றும் அகாரமிதுவென்றும்
அளியாத திருநாம நிஜரூபவடிவோன்
சௌவென்றும் உவ்வென்றும் வசியவாவென்றும்
சகலசத்துருநாச சங்காரனென்றும்
மௌவென்றும் உவ்வென்றும் மசிவசியென்றும்
மங்காதகங்களாக ரூபமாய்நின்று
நௌவென்று சிவ்வென்று நடனங்கள் செய்யும்
நரசிங்கவயிரவர் ஆடலிதுதானே.

14. அக்கரவமது சூடும் ஈசனும் நானே
அழியாதும் உயிர்பெற்ற அரசனும் நானே
மக்கள் மனை சுற்றமுளுதாழ்பவன் நானே
மற்றேது தெய்வங்கள் புவிமீதிலுண்டோ
இக்கணமெனக்கதனைக் காட்டடாவென்று
இரணியனும் நரசிங்கம் போல எழுந்து
பக்கத்திலிருந்ததொரு தூண்தனையுதைக்க
படீரென்றெழுந்த நரசிங்கவயிரவரே.

15. நரனானவடிவோடு சிங்கமுகமாகி
நகை செய்த இரணியன்மார்பைப்பிளந்து
சொரிந்திட்ட உதிரமதை சோராமலுண்டு
துணைகொண்ட மாகாயுடனங்கு நின்று
அரியென்ற திருநாமமது மாறவிட்டு
அகிலங்களெங்கிலும் அதிவேகமாக
திரிகின்றதிருமாலே சிங்காரமான
நரசிங்கரூபனே நமையாண்டுகொள்ளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ஆண்டடிமை கொள்ளுமெளம்மாதி சிவாயநம
ஆதிநாராயணசுவாமி சிவாயநம
பாண்டவர்க்கு தூதானபரனே சிவாயநம
பார்பதிதமையெனவந்தாய் சிவாயநம
நீண்டரவினிற்பள்ளி கொண்டாய் சிவாயநம
நீறணியுமீசர் மைத்துனரே சிவாயநம
தாண்டவம்புரியும் தற்பரனே சிவாயநம
தாரணியில் பெலிபூசை கெண்டதொருதேவே.

17. தேவாதிதேவனாய் நின்றாய் நமோநம
செங்கண்மால் ரூபனாய் உற்றாய் நமோநம
ஏகாத ஏவல்வினைமாய்த்தாய் நமோநம
இரணியனை இருகூறாய் பிளந்தாய் நமோநம
ஆகாத மாமனை வதைத்தாய் நமோநம
அறியாத என் பாடகற்கருள்வாய் நமோநம
நாவாரவாழ்த்திடும் அடியவர்க்கருள்வாய்
நரசிங்கரூபனே நான்செப்புமிதுவே.

18. செப்பெரிய கற்பூரதீபமொடு தூபம்
சேகண்டி தவில்தாரை சின்னாங்களுத
அப்பனே முப்பளமோடன்னம் மதுவுடன்
அஞ்சாமல் கஞ்சாவும் அவினுடன் சேர்த்து
தப்பாதளிப்போர்கள் தங்கள் துயர்தீர்த்து
தருசென்னல்விளைய மழைதானே பொழிவித்து
நற்பாதம்தந்துமே நமையாண்டுகொள்ளும்
நரசிங்கரூபனே நமைக்காத்தருளே.

19. காராளி சூளட்ட கிரியெட்டுத்திக்கிலும்
காவல்கொண்டேவரும் ஏவல்வினைஅகற்றி
தாராளமாகவே பெலிபூசை கொண்டு
தாங்கரிய ஆங்காரவேகமதுவாகி
சீர்காளியுடன்கூடித் திருநடனமாடி
திக்கெக்கிலுமுள்ள மக்கள்துயர்தீர்த்து
நாராயணக்கடவுளான தொருபரனே
நரசிங்கரூபனே நமஸ்த்தே நமஸ்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கருணைசெறி கைலாயநாதரும் வாழி
கரிமுகவன் அரிபிரமர் அமரர்முனி வாழி
சரணமெனு மடியவர்கள் தன்மனதினமுமுதவு
சரஸ்வதிவாழி தமிழாகமம் வாழி
வருணன் மழைபொழிய வருமுகில்களும் வாழி
மாங்கையர்கள் கற்பரசர் செங்கோலும் வாழி
நரனுமொரு சிங்கமுகமாகி வருமெங்கள்
நரசிங்கவயிரவர் வாழ்க வாழியதே.

*நரசிங்க காவியம் முற்றிற்று.*

## நரசிங்கர் வெட்டு

ஓம் அரி அரி சிறி கெருட நாராய சுவாமி நரசிங்கரூபம் கொண்டு இரணியனை இருபிளம்பாய் பிளந்து மணிக்குடலை வாங்கியது போலே என்னோடு எதித்த சத்திராதிமேல் சென்று மார்பைப் பிளந்து வவ்வு வவ்வு சீக்கிரம் உட்சாடனம் மாறனம் பேதனம்தம்பனம் அங்கம் பசாசி ஏவினவனை மேலே சென்று தாக்கு தாக்கு திரிபுரதகனமாக சிவன் திரிபுரம் எரித்தால் போல சென்றவனை உயிரை வவ்வு வவ்வு மண்டு மண்டு சறுவ தடையையும் எரி எரி பொரி பொரி முறி முறி அறு அறு அக்கினிசூலம் தந்தாய் மாறு மாறு நரசிங்கா மாறணம் பண்ணு பண்ணு ஆசி ஆசி கல்லிடு தீயிடு பக்கறு பகையறு வில்பூட்டாயினும் வெட்டு வெட்டு அண்டரெண்டாங்களும் கண்ட துண்டாங்களும் வெட்டினேன் நரசிங்கா கவ்வு கவ்வு வவ்வு வவ்வு அவனைச் சென்று வவ்வு நரசிங்கா வா வா வந்து வெட்டு வெட்டு சுட்டெரி சுட்டெரி மாறு மாறு எரி முறி தெறிபட்டுப்போகவே சுவாகா!

ப.சூ.வெ.

## நீலி வெட்டு

ஓம் வராகி வராகி யோகி யோகி குண குண காளி காளி மாலங்கி மாலங்கி நீலி நீலி நீல கண்டன் வாறான் சுலுப்பு சுலுப்பு அல்லாக்கு சுலுப்பு மட மட துரு துரு பிடி பிடியம்மா தாயே பிடித்தாலும் உருவைப்பிடி அறு அறு அறவே சுவாகா!

நிணல் படம் எடுப்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரு

தந்தனத் தான தன தானா தன
தான தந்தனத் தானானா
தந்தனத் தான தன தானா தன
தான தந்தனத் தானானா தன
தான தந்தனத் தா னா னா

## பாடல்

01. விக்கினம் தீர்க்கும் விநாயகனே உன்னை
வேண்டிப்பணிந்தேனே ஐங்கரனே
வக்கர துண்டனே வால கணேசனே
வந்திங்கு கும்மிக்கு முன்னடலாய் சாமி
இந்த நல் கும்மிக்கு முன் வருவாய்

02. முன்னிற்க வாரும் கலைவாணி தாயே
முத்தமிழ் நர்த்தன நாயகியே
அன்னையே வாலையே என் நாவிலுறைந்திடு
ஆன நரசிங்கர் மேல்பாட அம்மா
சாமி நரசிங்கா் மேற்பாட

03. பாடிட ஓடி எதிர்வரும் மகா
பத்தினியே முத்து மாரியம்மா
தேடியே வந்தோரைக் காத்தருள் தெய்வமே
தென் முகக் காளியே பாருமம்மா-எங்கள்
ஊர்உறைதெய்வமே வாருமம்மா

04. வாருமையா பரத்தாமனை கண்ணனே
வால நரசிங்கரானவரே
ஆயா் இடைச்சேரி ஆண்டவனே நீல
அச்சுதனே பச்சை ரெட்சகனே சாமி
அச்சுதனே பச்சை மாலயனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பச்சை நல் ஆலையில் பள்ளி கொண்டாய் அன்னை
லெட்சுமி தன்னோடு காட்சி தந்தாய்
இச்சை அகற்றி நீ என் மனத் துள்ளுறை
எம் பெருமாளே வா கோவிந்தனே நல்ல
அன்பு தன் தாளவா வைகுந்தனே

06. பத்தவதாரம் எடுத்தவராம் பூமி
பாரமும் தீர்த்திட வந்தவராம்
கத்துக்கடல் புவி ஈரேழும் இந்தக்
கண்ணனின் ஆணையில் சுத்துமடி பச்ச
மாயவன் ஆணையில் நிற்கும் மடி

07. மாயனாம் சீதையின் ராமரடி மாய
மானுக்குப் பின்னாலும் ஓடினான்டி
ஆயரின் வெண்ணையைத் தின்றவன்டி இந்த
ஆன நரசிங்க சாமியடி இப்போ
கோப முகத்தோடு வாறாரடி

08. கோபத்துடன் கண்கள் தான் சிவக்க இரணியனை
கொண்டு பிடித்து மடிகிடத்தி
வேகத்துடன் இரு கூறாக நெஞ்சை
மிக்கப் பிளந்தாரே கூர்நகத்தால் சாமி
தப்பா துதிரமே தான் குடித்தார்

09. கம்சனை வெஞ்சமர் வென்றவன்டி திருக்
காளிகா நர்த்தனம் ஆடினான்டி
பஞ்சவர் தம்மையும் காத்தவன்டி பெரும்
பாரதப் போரை முடித்தவன்டி நாமும்
பாடிடக் கீதையும் தந்தவன்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. தந்தருள் என் போர்கு வந்தருள் தந்திடும்
சுந்தரமான நரசிங்கரவர்
வந்தனை செய்து வலம் வந்து கோயிலை
வாழ்த்தி வணங்கி அருள் பெறுவோம் இவர்
ஏற்றவரம் தரும் சாமியடி

11. சாமியடி பிரகலா தன்தனக்குமே மாயன்
தன்னுருவம் தன்னை காட்டினாராம்
ஆமை உருவம் எடுத்தவராம் அந்த
ஆஞ்ச நேயர் உள்ளம் கொணடவராம் சாமி
ஆடியே வாறார் இதோ பாருங்கடி

12. கெண்டையாய் வண்டு உருவெடுத்தார் அம்பு
கூட மேலும் குந்தி இருந்தாண்டி
கன்றுகள் காலிகள் மேய்த்தவண்டி எங்கள்
கண்ணனெனும் நரசிங்கனடி சாமி
திண்ணமுடன் வாறத்தைப் பாருங்கடி

13. கண்ணனாம் தேவர்க் கமுதளித்தார் பசு
காளைகள் மேய்த்து இடையனா னான்
குன்று எடுத்து மழை தடுத்தார் அழகுக்
கோபியர் சேலையைக் கொள்ளையிட்டார் - தெய்வ
மங்கையர் சேலையைக் கொள்ளையிட்டார்

14. இரணியன் தன்னையும் கொன்றவென்டி ஈழத்
திராவணன் தன்னையும் வென்றவண்டி
அரவானைக் கடைப்பலி ஆக்கிவைத்தார், வீர
வாலியை மண்ணோடு மாய்த்தவண்டி கொடிய
வாலியை மண்ணோடு மாய்த்தவண்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. மண்ணோடு விண்ணும் அளந்தவராம் மாயன்
மாபலியைச் சிறைவைத்தவராம்
அன்னைய சோதையின் கண்மணிகண்ணாம்
அன்புடன் வாறதைப் பாருங்கடி நர
சிங்கரும் வாறதைப் பாருங்கடி

16. கொட்டிக் கொடுத்தார் குசேலருக்கு பொன்
மட்டில்லாதாக நிதி கொடுத்தார்
அட்டமா சித்தருள் ஆதிநரசிங்கரை நாம்
ஆடிப் பாடுவோம் வாருங்கடி அவரைத்
தேடிப் போற்று வோம் வாருங்கடி

17. தேடியே வந்தோரைக் காத்திடுவார் தெய்வ
சிறி தேவி பூதேவி சேர்ந்திருப்பார்
நாடியே லட்சுமி யோடிப்பார் இந்த
நாரணனே நரசிங்கரடி சாமி
வாற வடிவத்தைப் பாருங்கடி

18. பாண்டவர்க்குத் தூது சென்றவராம் அந்தப்
பாஞ்சாலி தன்னையும் காத்தவராம்
ஆண்டவன் ஆன நீண்டவடிவுள்ள
ஆதி நரசிங்கசாமியடி இவர்
சோதி வடிவுடன் வாறாரடி

19. எங்களை ஆண்டருள் வெங்கடேசா உந்தன்
ஏற்ற நல் வைகுந்த வாழ்வருளாய்
கூற்றன் உயிரைக் கொடு போகமுன்னம்
கோவிந்தா உன்னருள் தந்தருளே நர
சிங்கரே அன்புடன் வந்தருளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. சாமி நரசிங்கா காத்தருள் என்றாலும் இவர்
தட்சணம் ஓடியே வந்திடுவார்
நாமும் அவர் புகழ் பாடியே போற்றி
நன்னருள் பெற்றிட்டு வாழ்த்திடுவோம் நர
சிங்கரை போற்றிப் பணிந்திடுவோம்

21. போற்றி பணிந்தோற்கு நற்கதி மோட்சமும்
புண்ணியப் பரகதி கிட்டுமடி
ஏற்றியே பாவை தன் நோன்பதை நோற்றாக்கால்
எங்கள் பிணிபகை மாறுமடி கிரக
தோஷமும் தீர்ந்திட வாழ்த்திடலாம்

22. வாழ்ந்திட மக்கள் அருள் போற்றி இந்த
வையகம் நன்நிலை பெற்றிடவே
சூழ்ந்த துயர்கள் அகன்றோட நர
சிங்க சாமியே போற்றி ஐயா உந்தன்
அன்புடன் கும்மிக் கருள் தந்திடடையா

23. தந்திடடையா கும்மி பாடுவோர் நாலிலே
வந்திடையா லட்சுமி தன்னோடு
எந்த இடர் பகை வந்தாலும் எம்மை
காத்திடு சாமி சரணமையா நரசிங்கசாமியே
உன் பாதம் சரணமையா சரணம் சரணம்

*நரசிங்க சுவாமி பேரின்ப கும்மி முற்றிற்று*

## மதுரைவீரன் வெட்டு

ஓம் மால சால உப்புளு கிமா மட்டுபடாத மதுரை வீரா ஆருக்கும் அடங்காதவனே எழுந்திரு எழுந்திரு இடக்கையில் மாட்டுசுருக்கும் வலது கையில் மச்சக்காவடியும் இடது தோளிலேசெருப்பு தைக்கும் சுற்றுளியும் வலது தோளிலே தண்ணீருமாக கரும் குருவி மீதேறி வா வா வீரமுண்டாயா அவன் முதுகை அறுத்து அறுத்து ஆவேசமாக்கி எனக்கு எதித்த சத்திராதிகளை சீக்கிரம் சீக்கிரம் போடு போடவே சுவாகா!.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் வெட்டு

ஓம் சிறியும் மிறியும் கிலியும் கிலியும் சரவண சண்முகாயா சாடு சாடு சங்கரி சங்கரி சிரித்த வாயும் விரிந்த சடையும் சென்னிறமுகமும் பன்னிரு கண்ணும் அகண்ட மார்பும் இருண்ட கண்ணும் அக்கினிக் கண்ணால் அனல் மழை பொழிய உக்கி சங்காரம் செய்த போது சக்கர வாழும்போலே வளைத்துக் கட்டிய மாயா பாஷத்தை சங்கரிக்க வென்று உன் தாயார் தந்த உக்கிற வீரசக்தியை கையிலேந்தி ஓம் மவ்வும் நவ்வும் சிறியும் மிறியும் கிலியும் சிங்ங வங்ங நசி நசி என்று சங்கரித்தால் போலே சாடு சாடு சங்ஙரி சங்ஙரி சத்துருவானவன் தன்முகம் நோக்கி அவன் புத்தியளித்து புலனை கெடுத்திடு எத்தி இழுத்து பிடுங்கிடு சக்தி வேல் விட்டு தாரகன் மார்பை பிளந்தாற் போலே அவன் நெஞ்சை பிளந்து நினக்குடலை வாங்கிடு சறுவ வங்ங அங்ங லங்ங லங்ங அங்ங ரங்ங சண்முகாயா சாடு சாடு சாரு மசி வலிங்க நம சிவத்தினாணை சறுவ பேய் பிசாசி பில்லி சூனியங்களை சங்கரி சங்கரி எரிஎரி படு படு சுவாகா!

# மண்ணுளி வைரவன் வெட்டு

ஓம் மண்ணுளி வைரவா வாவா வங்கவங்க மண்ணுளி மயான மண்ணுளி அரஅர மண்ணுழி அங்ங மண்ணுழி ஆகாச மண்ணுழி ஆ- ஈ என்முன் நில் என் சொல் கேள் உன்னுரை என் உரை உன்பகை என்பகை நீ எப்பெலி கேட்பினும் அப்பெலி நான் தருவேன் ஏகாந்த மண்ணுழி என் சத்திராதியின் மேலே சென்று அவன் அடி மணர்ந்து அடி அடி பிடி பிடி அவன் இரத்தம் குடித்திடு மண்ணுழி அவன் யீரலைப் பிடுங்கிடு குலாவி வா மண்ணுழி அவன் தசையை கிழித்து தா தா மண்ணுழி அவன் எத்தடை செய்தாலும் அத்தடையை நீ கிழித்திடு அன்று புரம் எரித்து அம்புறப் பாய்த்தாப் போல பாய் பாய் ஏறு ஏறு அரன் ரூபமாக அறு அறு முறி முறி தெறி தெறி சறுவ தடைகளும் அறுப்பட்டு போகவே சுவாகா! தண்ணீர் ஓதலாம் தேங்காய் தேசிக்காய் பூ. பூசணிக்காய் வெட்டலாம்.

நிணல் படம் எடுப்பது தவிர்க்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நரசிங்கப் பெருமான் துதி

01. எச்சுற்றம் எத்தாயர் எத்தந்தை
எம்மக்கள் எப்பூதம் ஏதுந்தனித்தே
அச்சுற்ற போதெந்தன் முன்வந்து நிற்பாய்
அப்போது நீயல்லா தாரேனு முண்டோ
பச்சைப் பசுந்தண் துளாய் மாலை மார்பா
பரந்தாமனே பரமனே பாபநாசா
நச்சுப் படத்தில் நடிக்கும் பிரானே
நரசிங்க ரூபா போற்றி போற்றி.

02. புல்லாய் முளைக்கின்ற பூடாய் நிலத்தில்
புழுக்கின்ற பல்காயப் பொல்லா உடம்பைக்
கல்லாகி மரமாகி விண்டிண்டா முன்
கருணாகரா நின் கழல் சேரவையாய்
சொல்லாய் எனக்கொன்றும் யானே தொழியத்
தொழும்பாகி வாழத்துடிக்கின்ற தமியேனை
நல்லார் உரைக்கத் தரிக்கப் பிறந்தாய்
நரசிங்கா ரூபா போற்றி போற்றி.

03. இடுமாறு கருதேனைப் பொருள் தேடவைப்பாய்
இடாதாரிடம் சென்றிரந்தும் பரந்தும்
தடுமாறித் திரிகின்ற தன்மைக்கு நெஞ்சந்
தளர்ந்தேனை அஞ்சேனை எனத்தக்கதண்டோ
நெடுமார் புரந்தூண் உறைந்தேகி நிற்பாய்
நிறைந்தே புறப்பட்டு நீர் வாழ் அரக்கன்
நடுமார்பிரண்டாக நகரேகை யுடையாய்
நரசிங்க ரூபா போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. காகக் கணத்தோடு கடி நாய் தனக்கும்
கடுங்காளி வெம்பூதம் கடையற்றுப் போக
வேகப் பருந்துக்கும் வெள்வாய் நரிக்கும்
விடக்காய் விடாமுன் வெளிநிற்க வேணும்
யோகப் பிரதாபன் ஒருதாய் சொல் மறவாமல்
ஒரு தம்பி உலகாள, ஒரு தம்பியுடனே
நாகக் கருங்காடு நண்ணும் பிரானே
நரசிங்கா ரூபா போற்றி போற்றி.

05. ஆலுக்கு மேலேயமர்ந்து துயின்றாய்
அல்லையாழி அமிர்தத்தை அன்றே இடைந்தாய்
காலிக்கு பின் சென்று குழலூதி நின்றாய்
கஞ்சன் தனைக் கொன்று நெஞ்சைப்பிளந்தாய்
வாலிக்கு நிகரான சுக்ரீவன் தன்னை
வாவென்றழைத்தங்கு மண்ணைக் கொடுத்தாய்
நாலுக்கும் மூன்றுக்கும் நடுவாகி நிற்பாய்
நரசிங்க ரூபா போற்றி போற்றி

06. காலன் கடிந்தோடி வருமுன்னவன்
கயிற்றோடு கட்டுண்டிழுப்புண்டா முன்
கோலங்குறித்தங்கு முன்வந்து நிற்பாய்
கூராளி வெண்சங்கு கொண்டோடி வருவாய்
ஆலம் தவிர்த்தானை ஐயம் தவிர்த்தாய்
அகிலம் தவிர்த்தானை அவன் ஆவிக்கொள்வாய
ஞாலம் படைத்தானை நாபிற்றரிந்தாய்
நரசிங்க ரூபா போற்றி போற்றி.

07. வாராதிருந்தார் வயிற்றில் பிறந்தார்
மண்கண்டபோதே மறந்தார் பிரானை
சீரார் பிறந்தார் தவழ்ந்தார் இருந்தார்
நடந்தார் கிடந்தார் இறந்தார் எனாமுன்
நீராழி உலகேழும் அளவிட்ட பாதம்
நெஞ்சத்தில் வைத்தேனை அஞ்சற்க என்றாய்
நாராயணா வேதம் உலகோதும் பொருளே
நரசிங்க ரூபா போற்றி போற்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. பச்சங்க முச்சங்க மிச்சங்க மென்றே
பதிச்சங்க மெல்லாம் உரைக்கொண்டு நின்றே
இச்சங்க வாசற் படிக்கொண்டு நின்றே
இணைச்சங்கமாமோ ஏ, ஏ, என்னலாமோ
வெச்சங்க மெப்போது மைவர்க்குமாகி
விசயன்நன் தடந்தோரின் மீதேறு வள்ளல்
நச்சுப் புனற்கீற்று நளினச் செவ்வாய்
நரசிங்க ரூபா போற்றி போற்றி.

09. அற்றாரெனாபோது ஆனாயும் நீயே
அயனோது வேதம் அளித்தாயும் நீயே
சிற்றாயர் குலம் வாழ வந்தாயும் நீயே
சிவனார்தம் ஐயம் பிறந்தாயும் நீயே
பெற்றாயும் நீயே பிறந்தாயும் நீயே
பிறவாத பேராளன் ஆனாயும் நீயே
நற்றாழில் உலகேழும் அளந்தாயும் நீயே
நரசிங்க ரூபா போற்றி போற்றி.

10. வித்தாரமாகவே வந்தவனும் நீயே
விண்ணவர் தமக்குதவி செய்தவனும் நீயே
சுற்றாகிலும் தபசு தட்டாத நீயே
தம்பட்ட மல்லாரி தாரையுள்ளவனும் நீயே
கற்றார் வனப்படைகள் உள்ளவனும் நீயே
கதிர்காம வேலவற் கருகான நீயே
வற்றாத பொய்கை தனில் வந்துறைந்தாயே
வரமுதவு நரசிங்க சுவாமி என வருதம்பிரானே!

## பிராணவ மந்திரம்

ஓம் பிராணப் பிறிதிலே நம ஓம் விறுமா விட்னு
உருத்திராயா ஏறு ஏறு ஓம்மந்திரப் பிறாணாயா
ஓம் உயிர் பிறாணயா நம ஓம் வாலகுரு காளமாமுனி
யே நம சிவ

*சுபம்*
*நரசிங்க காவியப் பாடல்*
*முற்றிற்று*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலவர் நாகமணி விநாயகமூர்த்தி அவர்களின் இதர வெளியீடுகள் ஆக்கமும் தொகுப்பு நூல்களும்:

| | |
|---|---|
| திருப்புகழ் | 225.00 |
| கந்தர் அனுபூதி அலங்காரம் | 135.00 |
| பட்டினத்தார் பாடல்கள் | 215.00 |
| திருவாசகத் தேன்துளிகள் | 130.00 |
| ஆதிமூலகெருடபத்து | 110.00 |
| உகந்தை முருகன் பாமாலை | 85.00 |
| திருக்கோயில் முருகன் போற்றிமாலை | 80.00 |
| திரு மண்டூர் முருகன் பாமாலை | 80.00 |
| வெருகல் முருகன் போற்றிமாலை | 80.00 |
| புயல் காவியம் | 80.00 |
| பாத நடையின் மகிமைகள் | 100.00 |
| சனிபகவான் தோத்திரம் | 80.00 |
| சிவசெந்திமாலை | 80.00 |
| பேச்சியம்மன் காவியம், கும்மிப் பாடல் | 145.00 |
| வயிரவர் அகவல் காவியப் பாடல் | 125.00 |
| நரசிங்கர் காவியப் பாடல் | 180.00 |

மேற்படி நூல்கள் தேவையானோர்
கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற முடியும்

ஈஸ்வரி இல்லம்
மாரியம்மன் கோயில் வீதி,
சேனைக்குடியிருப்பு-01B.
077-6538667

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org